டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 26.06.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 008 - Madurai | Online Edition

# இந்தியாவின் வேளாண் ஏற்றுமதிக்கு வலுசேர்க்கும் 'பாரதி' திட்டம் முதல் தொகுதி வெற்றி!

புது தில்லி, ஜூன் 25

மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், வேளாண் ஏற்றுமதியில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க 'பாரதி' எனும் முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இதன் முதல் தொகுதியில், நாடு முழுவதும் உள்ள 22 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 100 புத்தொழில் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 120 மணி நேர ஏற்றுமதி சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம், உலகளாவிய சந்தை வாய்ப்புகள், வணிக வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவி பெற்று, பல நிறுவனங்கள் வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. குறிப்பாக, துபாய், நியூசிலாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு மாம்பழங்கள், சிறுதானிய உணவுகள், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் புவிசார் குறியீடு பெற்ற விளைபொருட்களை ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளன. 2030க்குள் 50 பில்லியன் அமெரிக்க டாலர் வேளாண் ஏற்றுமதி இலக்கை அடைய இத்திட்டம் பெரும் உதவியாக அமையும் என உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# ஆவணிப்பேரூர் கீழ்முகத்தில் கால்நடை பராமரிப்பு மற்றும் இயற்கை விவசாய பயிற்சி



சேலம், ஜுன் 25

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், அட்மா (ATMA) திட்டத்தின் கீழ், வட்டார அளவிலான 'நாட்டு கால்நடை இனங்கள் மற்றும் அதன் பராமரிப்பு' குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நேற்று முன் தினம் சேலம் மாவட்டம், அவணிப்பேரூர் கீழ்முகம் கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) பூங்கொடி தலைமை தாங்கினார். வேளாண்மை துணை அலுவலர் குப்பண்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அட்மா திட்ட வட்டார அதிகாரிகள் இதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

இம்முகாமில் சேலம் ஆவின் நிறுவனத்தின் கால்நடை மேலாளர் டாக்டர் மதன் குமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, நாட்டு மாட்டினங்கள் மற்றும் கால்நடைகளைப் பராமரிக்கும் முறைகள் குறித்து விரிவான விரிவுரை ஆற்றினார். கோடை மற்றும் பருவ காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள். நாட்டு இனங்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் பால் வளம் பெருக்குதல். தீவன மேலாண்மை மற்றும் முறையான பராமரிப்பு முறைகள், விவசாயிகள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கு அவர் விரிவான விளக்கங்களை அளித்து ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வேளாண்மை உதவி இயக்குனர் பூங்கொடி, 'கேத் பச்சாவ் அபியான்' (Khet Bachao Abhiyan – நிலம் காப்போம் இயக்கம்) திட்டத்தின் நோக்கம் குறித்தும், மண்ணின் வளத்தைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் பேசினார். மேலும், விவசாயிகளுக்குக் கிடைக்கும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும் அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சி முகாமில் ஆவணிப்பேரூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட முற்போக்கு விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பவானிசாகர் வட்டாரம் பனையம்பள்ளி கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் வயல் விழா



ஈரோடு, ஜூன் 25

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரம், பனையம்பள்ளி கிராமத்தில் வேளாண்மைத்துறை அட்மா திட்டத்தின் மூலம் வயல் விழா நடைபெற்றது.

இவ்வயல் விழாவிற்கு பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் யசோதா தாங்கினார். தோட்டகலை உதவி இயக்குநர் பிருந்தா தோட்டக்கலை துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். மேலும் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் பேராசிரியர் சத்தியசீலன், பயிர்களில் ஏற்படும் பூச்சிகளை இயற்கை முறையில் பூச்சி விரட்டி தயாரித்து கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். நஞ்சு இல்லா விவசாயம் பற்றி விரிவாக பயிற்சியளித்தார். கோபி வேளாண்மை அறிவியல் நிலையம் விஞ்ஞானி சரவணகுமார் மண்வளம் மேம்பாடு, இயற்கை விவசாயம் மற்றும் இராசயான உரங்களை குறைத்து பயிருக்கு தேவையான உரமிடுதல் பற்றியும், மானாவாரி நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சியளித்தார்.

வேளாண் பொறியியல்துறை உதவிப் பொறியாளர் விஜய், வேளாண்மை பொறியியல் துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். மேலும் வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை வேளாண்மை அலுவலர் அபிநயா, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் செயல்பாடுகள், வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார். மீன்வளத்துறை ஆய்வாளர் ரமேஷ் பாபு, மீன்வளத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானிய விபரங்களை விரிவாக எடுத்து கூறினார். மேலும் வயல் விழாவில் வேளாண் இயந்திரங்கள், வேளாண் கருவிகள் மற்றும் இடு பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர் கௌரிசங்கர் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கருணாம்பிகை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அன்புராஜ், மீரா செய்திருந்தனர். நிகழ்ச்சியில் 100 மேற்பட்ட விவசாயிகள் கலந்து பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## ஊட்டச்சத்து பானங்கள்

**பானகம்**

**தேவையான பொருட்கள்**

வெல்லம் – 1/2 கப் (பொடித்தது)

தண்ணீர் – 2 கப்

இஞ்சி தூள் – 1/4 தேக்கரண்டி

மிளகு தூள் – 1/4 தேக்கரண்டி

ஏலக்காய் தூள் – 1/2 தேக்கரண்டி

உப்பு – ஒரு சிட்டிகை

எலுமிச்சை சாறு – 4 தேக்கரண்டி

**செய்முறை**

1. ஒரு பாத்திரத்தில் தண்ணீர் மற்றும் வெல்லம் சேர்த்து, வெல்லம் கரையும் வரை கலக்கவும்.

2. இஞ்சி தூள், மிளகு தூள், ஏலக்காய் தூள் மற்றும் உப்பு சேர்க்கவும்.

3. கடைசியாக எலுமிச்சை சாறு சேர்த்து நன்றாக கலக்கவும்.

4. வடிகட்டி குளிரவைத்து பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**



# கிசான் கோஸ்திஸ் விவசாயிகள் ஒருங்கிணைப்பு முகாம்



சிவகங்கை, ஜூன் 25 சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் 2025-26 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்தீஸ் அனைத்து துறைகள் சார்ந்த ஒருங்கிணைப்பு முகாம் ஏனாதி கிராமத்தில் 25.06.26 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருப்புவனம் வேளாண்மை உதவி இயக்குநர் மலர்விழி தலைமையேற்று வரவேற்புரை வழங்கினார்.

வேளாண்மை துணை இயக்குநர் செல்வம் (உழவர் பயிற்சி நிலையம், சிவகங்கை) விளைநிலம் காப்போம் இயக்கம், பிரதம மந்திரி கௌரவ நிதி உதவி திட்டம் மற்றும் விவசாயிகளுக்கான அடையாள அட்டை முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண் அறிவியல் நிலைய குன்றக்குடி உதவி பேராசிரியர் அனிதா ஸ்ரீ வேளாண் விளைபொருட்களின் மதிப்பு கூட்டல் மற்றும் இதர பயிற்சி வழங்குதல் பற்றி எடுத்துரைத்தார். (ஆர்.என்.ஆர் அக்ரி டெவலப்பர்) ராஜேஷ் நல்லையா, நெல், வாழை, கரும்பு காய்கறி பயிர்களின் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் கே ஆசீப், மல்பெரி பட்டுபுழு வளர்ப்பு குறித்த தொழில்நுட்பங்கள் மற்றும் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் விஜயராணி, திட்டப் பணிகள் குறித்து எடுத் துரைத்தார். தோட்டக்கலை துறை உதவி வேளாண்மை அலுவலர் செல்வக்குமார், பழ மரக்கன்றுகளுக்கான தொழில்நுட்பங்கள் மற்றும் தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் துறையின் இடுபொருட்கள் குறித்த கருத்து காட்சி அமைக்கப்பட்டது. வட்டா ரதொழில்நுட்ப மேலாளர் சத்யா, அட்மா திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் நந்தினி மற்றும் சண்முகப்பிரியா இதற்கான ஏற்பாடு களை செய்து செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். ஏனாதி கிராம விவசாயிகள் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# பட்டுத்துறையில் மக்காச்சோள பயிர் மேலாண்மை பயிற்சி : நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிக்க விஞ்ஞானி அறிவுரை!



சேலம், ஜூன் 25

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், பட்டுத்துறை கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா (ATMA) திட்டத்தின் சார்பில், மக்காச்சோளப் பயிரில் 'ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை' குறித்த மாவட்ட அளவிலான சிறப்பு தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமிற்கு தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமை தாங்கி, முகாமைத் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், 'விவசாயிகள் பாரம்பரிய முறை களைத் தவிர்த்து, வேளாண் துறையின் ஆலோசனைகளைப் பெற்று நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் சாகுபடி செலவைக் குறைத்து, நிகர லாபத்தை அதிகரிக்க முடியும்' என வலியுறுத்தினார்.

இம்முகாமில் சிறப்பு அழைப்பாளராக ஏத்தாப்பூர் மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய வேளாண் விஞ்ஞானி வேல் முருகன் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார். அவர் மக்காச்சோளப் பயிரைத் தாக்கும் முதன்மையான 'படைப்புழு' (Fall Armyworm) தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்துப் பேசுகையில், கோடை உழவின் முக்கியத்துவம் மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிகளை அமைத்தல், மக்காச்சோளப் பயிரில் சரியான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அடியுரமாக இடும் முறைகள். வறட்சியைத் தாங்கி அதிக மகசூல் தரும் வீரிய ரகத் தேர்வுகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவான ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் பேசுகையில், உழவன் செயலியின் பயன்பாடுகள், தற்போதைய காரிப் பருவத்திற்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட விதைகள் விநியோகம், சொட்டுநீர்ப் பாசன மானியங்கள் போன்ற வேளாண் துறையில் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு மானியத் திட்டங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்து விளக்கினார். ஆத்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமேஷ், ஆத்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் வெளிமாநிலச் சுற்றுலாப்

பயிற்சிகள், செயல்விளக்கத் திடல்கள் மற்றும் பண்ணைப் பள்ளிகள் போன்ற திட்ட நோக்கங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இப்பயிற்சி முகாமில் பட்டுத்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

முகாமின் நிறைவாக, ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை ஆத்மா திட்டப் பணியாளர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் செய்திருந்தனர்.



# தோட்டக்கலை பண்ணையில் மைக்ரோ கிரீன் தொழில்நுட்ப பயிற்சி

கோயம்புத்தூர், ஜூன் 25

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தோட்டக்கலை கல்லூரி சார்பில் இளங்கலை பயிற்சி பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டு நடந்தது.



இந்நிகழ்வில் 30க்கும் மேற்பட்ட கோவை மகளிர் மற்றும் ஆண்கள் கலந்து கொண்டனர். மைக்ரோ கிரீன் பயிற்சி தோட்டக்கலை பண்ணையில் செயல் விளக்கத்துடன் நடைபெற்றது.

நுண்கீரைகள் வளர்ப்பது அதில் ஏற்படும் சந்தேகங்கள் குறித்து கலந்து கொண்டவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை தோட்டக்கலை காய்கறி துறை பேராசிரியர் இந்திராணி, பயிற்சியினை துவங்கி வைத்தார். பயிற்சியில் ஏற்படும் சந்தேகங்களுக்கு காய்கறி துறை உதவி பேராசிரியர் விளக்கம் கொடுத்தனர்.




வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரிடம் வேளாண்மை புத்தகம் கொடுத்து, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) அக்ரி டாக்டர் த.ராதாகிருஷ்ணன் வாழ்த்து பெற்ற தருணம்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஜூன் 25

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் நோயியல் துறையில் திறன் சார்ந்த மூன்று நாள் 'காளான் விதை உற்பத்தி மற்றும் காளான் வளர்ப்பு பயிற்சி 29.06.26 முதல் 01.07.26 வரை நடைபெற உள்ளது. பயிற்சி கட்டணம் ரூ.5,370/- (ரூபாய் ஐயாயிரத்து முந்நூற்று எழுபது மட்டும்) (வரி கட்டணம் உட்பட). பயிற்சிக்குமுன் பதிவு அவசியம். பயிற்சி கட்டணத்தை நேரடியாகவோ அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாகவோ செலுத்தலாம்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422 - 6611336, 6611226, அலைபேசி : 93618 89846, 63792 98064, 95432 70758, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# மண்ணிற்கு உரமாகும் தக்கைப் பூண்டு

இராணிப்பேட்டை, ஜூன் 25

விவசாயம் செழிக்க மண்வளம் காக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜி திலகவதி கூறியுள்ளார்.

பெரும்பாலும் இரசாயன உரங்களை நல்ல விளைச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மாற்றாக தக்கை பூண்டை இயற்கையான பசுந்தால் உரமாக பயன்படுத்தலாம். தக்கைப் பூண்டினை நிலத்தில் பயிரிட்டு பூக்கும் பருவத்தில் மடக்கி உழுவதால் மண்வளம் பெருகி நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது என தெரிவித்தார்.

**தக்கைப்பூண்டு சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள்**

அனைத்து வகையான மண்ணில் வளரக்கூடிய தாவரம். பல

ஆண்டுகளாக மண்வளத்தை மேம்படுத்தும் பசுந்தால் உரமாக பயன்படுகிறது.

வறட்சி தாங்கி வளரும், எந்த தாவரமும் வளராத களர் மண்ணில் கூட சாதாரணமாக வளரும். மழை காலங்களில் இதன் வளர்ச்சி வெகு வேகமாக இருக்கும். ஏக்கருக்கு 20 கிலோ விதைகள் தேவை. 50 நாளில் கிட்டத்தட்ட ஐந்து அடி உயரம் வரை வளர்ந்து பூவிட்டு பிஞ்சு வர ஆரம்பிக்கும் சமயத்தில் மடக்கி உழ வேண்டும். அதற்கு மேல் தாமதித்தால் தண்டு நார் பிடித்து விடும். இதனால் இயந்திரம் கொண்டு உழும்போது துண்டாகாமல் சிக்கிக் கொள்ளும். இதையே 90 நாட்களுக்கு மேல் விட்டு வைத்தால் காய்கள் நன்கு முற்றி விதைகளை அறுவடை செய்யலாம்.

**மண்ணில் மடக்கி உழும் போது கிடைக்கும் நன்மைகள்**

இப்பயிரில் உள்ள வேர் முடிச்சுகளில் உள்ள பாக்டீரியாக்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை மண்ணில் நிலை நிறுத்துகிறது. இதனால் மண்ணில் உள்ள தழைச்சத்து அதிகரித்து மண்வளம் மேம்படுகிறது. மேலும் தொடர்ந்து விதைப்பதால் களர் தன்மை முற்றிலும் மாறும். மண்ணில் காற்றோட்டம் அதிகரிக்கும், மண்ணில் கரிமச்சத்து அதிகரிக்கும், மண்ணில் நீர் பிடிப்பு தன்மை அதிகரிக்கும். மண்ணில் நுண்ணுயிர்கள் வேகமாக பெருகும். மண்புழுக்கள் எண்ணிக்கையும் உடனே உயரும்.

வாலாஜா வட்டாரத்தில் மண்ணை வளமாக்கும் நோக்கத்துடன், முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு 50 % மானியத்தில் ஒரு ஏக்கருக்கு 20 கிலோ, வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. தக்கைப்பூண்டு 20 கிலோவின் முழு விலை ரூபாய் 2800 /- ஆகும். அரசு மானியம் ரூபாய் 1400. /- ஆகும். விவசாயி பங்கு தொகை ரூபாய் 1400/- ஆகும்.

இத்தகைய நன்மை பயக்கும் பசுந்தால் பயிர்களை பயிரிட்டு உரமாக பயன்படுத்தி நெல் உள்ளிட்ட அனைத்து பயிர்களிலும் கூடுதல் மகசூலை பெற்று பயன் பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குனர் ஜி திலகவதி தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# இஸ்ரேலின் வேளாண் புரட்சி - நமக்கு சொல்லும் பாடம் என்ன?

இயற்கை வளங்கள் குறைவாக உள்ள இடத்திலும் அறிவியலால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக உள்ள நாடு இஸ்ரேல் என்பது தான்.

உலக நாடுகளுக்கு நீர் மேலாண்மை மற்றும் விவசாயத் தொழில்நுட்பத்திலும் முன்னோடியாக திகழும் இஸ்ரேல். தனது நிலப்பரப்பில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துள்ள பாலை வனத்தையே (DESERT) பசுஞ்சோலையாக மாற்றி காட்டியுள்ளது.

**இஸ்ரேலின் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் என்னென்ன? (ISRAEL AGRICULTURAL TECHNOLOGY)**

இன்று இஸ்ரேல் அறிவியல் மற்றும் விவசாய தொழில் நுட்பத்தில் (முக்கியமாக சொட்டுநீர் பாசனம்) உலக முன்னணி நாடாக திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**1) சொட்டுநீர் பாசனம் (DRIP IRRIGATION)**

இஸ்ரேல் 1960யில் ‘சிம்சா பிளாஸ் (SIMCHA BLASS) என்ற பொறியாளர் தான் இதை உருவாக்கினார். செடியின் வேர் பகுதிக்கு நேரடியாக மிக குறைந்த அளவு நீரை சொட்டு சொட்டாக வழங்கும் முறை தான் இந்த நவீன தொழில்நுட்பம். இதில் மற்ற சாதாரண நீர்ப்பாசனத்தை விட 40% முதல் 70% வரை நீர் சேமிக்கப்படுகிறது. மேலும் ஒரு படி மேலாக உரங் களையும் தண்ணீரோடு கலந்து வழங்கும் பெர்டிகேன் (FERTIGATION) முறையும் இதில் சாத்தியமாகிறது.

**2) கடல் நீரை குடிநீராக்குதல் (DESALINATION)**

இஸ்ரேல் நாட்டில் மழை பொழிவு மிகவும் குறைவு என்பதால் கடல் நீரை சுத்தகரிப்பில் அவர்கள் உலகளவில் முதலிடத்தில் உள்ளனர். இதற்காக மிக பிரம்மாண்டமான ஆலையில் (SOREK) தலைகீழாக சவ்வூடு பரவல் (REVERSE OSMOSIS) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கடல் நீரையே குடிநீராக மாற்றுகின்றன. தற்போது இஸ்ரேலின் தேவையில் 80% இந்த முறையில் தான் பூர்த்தி செய்யப்படுகிறது.

### 3) கழிவுநீர் மறு சுழற்சி ( WASTE WATER TREATMENT)

மொத்த கழிவுநீரில் 90% சுத்தகரித்து மீண்டும் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன.

### 4) துல்லிய பண்ணையம் முறை (PRECISION FARMING)

மண்ணின் ஈரப்பதம், வெப்பம் மற்றும் பயிர்களின் உற்பத்தியை தானியங்கி சென்சார் (AUTAMATICAL SENSAR) மூலமாக கண்காணித்து பயிர்களுக்கு பூச்சிக் கொல்லி தெளிக்கவும். பயிர்களின் ஆரோக்கியத்தை ஆய்வு செய்யவும் ட்ரோன்கள்களை பயன்படுத்தப்படுகிறது. இதனால் குறைந்த இடத்தில் அதிக மகசூல் கிடைக்கிறது.

### 5) வறட்சியை தாங்கும் பயிர்கள் (DROUGHT TOLERENCE CROP)

மரபணு தொழில்நுட்பம் மூலமாக மிக குறைந்த நீரில் உப்புத் தன்மை கொண்ட மண்ணிலும் வளரக்கூடிய பயிர்கள் (தக்காளி, திராட்சை) போன்றவை அவர்கள் உருவாக்கிய (சொரி தக்காளி (CHERRY TOMATOES) உலகம் முழுவதும் பிரபலம்.

மேலே கண்ட தொழில்நுட்பங்களை நம்முடைய இந்தியாவில் கடைபிடிக்கப்பட்டு ஒவ்வொரு துளி நீரிலும் அதிக வருமானம் எடுக்கப்பட்டு வருகிறது. PMKSY நுண்ணீர் பாசனத் திட்டம் நாடு முழுவதுமாக செயல்படுத்தப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் சொட்டுநீர், தெளிப்புநீர் பாசன கருவிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தோட்டக்கலை பயிரில் துல்லிய பண்ணை முறை கையாளப்பட்டு வருகின்றன. இஸ்ரேலின் ஒவ்வொரு தொழில்நுட்பத்தை இந்தியா முழுக்க முழுக்க பயன்படுத்தி பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு தானிய உற்பத்தியை பெருக்க திட்டமிட்டுள்ளது. சின்னஞ் சிறு நாடு இன்று உலக நாடுகளுக்கு வழிகாட்டியாக உள்ளது (இஸ்ரேல்) என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விளைநிலங்களை பாதுகாப்போம் விழிப்புணர்வு முகாம்




கடலூர், ஜூன் 25

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக 25.06.26 அன்று மங்களூர் வட்டாரம், நெடுங்குளம் கிராமத்தில், விளைநிலங்களை பாதுகாப்போம் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, நிலங்களின் சத்துக் களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா, மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார்.

மேலும் முனைவர் சு.கண்ணன், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப் பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். உதவி இயக்குநர், வேளாண்மை துறை, வேளாண்மைக்கான மத்திய, மாநில திட்டங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர், உதவி வட்டார தொழில்நுட்ப அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், மங்களூர் வட்டாரம், நெடுங் குளம் கிராமத்தை சேர்ந்த 60-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# கிசான் கோஸ்தீஸ் என்கிற உழவர் திரள் பரவலாக்கம்

சேலம், ஜூன் 25

சேலம் மாவட்டம், வீரபாண்டி அட்மா திட்டத்தின் கீழ் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்ற கிஸான் கோஷ்தீஸ் எனப்படும் உழவர் திரள் பரவலாக்கம் சின்ன சீரகாபாடி கிராமத்தில் நடைபெற்றது.




வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ தலைமை தாங்கி மண் பரிசோதனை, மண் வள அட்டைகள், உரங்களின் சமச்சீரான பயன்பாடு மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள், பசுந்தாள் உரம் இடுதல் மற்றும் விவசாய அடையாள எண் பற்றி விரிவாக எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந் திரன் அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் நோக்கம் மற்றும் பயன்கள் பற்றி பேசினார்.



வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் எம்.ரவி அனைத்து வேளாண் மற்றும் தோட்டக் கலை பயிர்களில் காணப்படும் பூச்சி தாக்குதல் மற்றும் கட்டுப்பாடு பற்றியும் தோட்டக்கலை உதவி அலுவலர்கள் என்.சதீஷ்குமார், மானிய திட்டங்கள் மற்றும் நுண்ணுயிர் பாசனம் பற்றியும் இளநிலை பட்டு ஆய்வாளர் ஆர்.சரண்யா மல்பெர்ரி சாகுபடி, வெண்பட்டு வளர்ப்பு முன்னேற்றத்திற்கான

திட்டங்கள், மானியங்கள் குறித்தும் ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி, விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றியும், அமோகம் அக்ரோ நிறுவன கே.விஜயகுமார், வேளாண் இயந்திரங்கள் பயன்பாடுகள் பற்றியும் இயற்கை ஆர்வலர் ஆர்.புஷ்பராஜா இயற்கை வேளாண்மை மற்றும் தேன் வளர்ப்பு பற்றி எடுத்து கூறினர்.

வேளாண் இடுபொருட்களான விதைகள், நுண்ணூட்டம், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ, காண்டாமிருக வண்டு, கருந்தலை புழு மற்றும் வைரஸ் நோய் பாதிக்கப்பட்ட உயிர் மாதிரிகள், உயிர் உரங்கள், டிராக்டர், மினி டிராக்டர், மருந்து தெளிக்கும் கருவிகள், களை எடுக்கும் கருவிகள், இனக்கவர்ச்சி பொறிகள், பட்டுக்கூடுகள், காய்கறிகள், மல்பெர்ரி உயிர் மாதிரிகள் ஆகியவை விவசாயி களின் பார்வைக்கு கருத்து காட்சி அமைக்கப்பட்டு இருந்தது.

உதவி வேளாண்மை அலுவலர்கள் கே.பழனிசாமி மற்றும் ச.தனபால் ஆகியோர் கலந்து கொண்டனர். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி பயிற்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர். பயிற்சி முடிவில் விவசாயி களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

# குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில் பயன் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

புதுக்கோட்டை, ஜுன் 25

நடப்பாண்டில் நெல் சாகுபடியை ஊக்குவித்து உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தமிழக அரசின் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் 2026 அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கா.ரஹ்மத் நிா பேகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

குறுவை பருவத்தில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்வதை ஊக்குவித்திடவும் அதிக மகசூல் பெறும் வகையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காத்திடும் வகையிலும் நடப்பாண்டில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தினை தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் உழவன் செயலி மூலமாகவோ (அ) வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலோ வரும் ஜுலை 31ம் தேதிக்கு முன்பாக பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்திட்டத்தில் இயந்திர நடவு அல்லது நேரடி நெல் விதைப்பு முறையில் நெல் சாகுபடி மேற்கொள்ளும் வேளாண் விவசாயிகளுக்குஒரு ஏக்கருக்கு ரூ.4000 பின்னேற்பு மானியம் வழங்கப்படுகிறது. பின்னேற்பு மானியம் வழங்கிட பொன்னமராவதி வட்டாரத்திற்கு 200 ஏக்கர் இலக்கீடு பெறப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் மண் வளத்தை மேம்படுத்தி கூடுதல் மகசூல் பெற நெல் நுண்ணூட்ட உரக் கலவை ஏக்கருக்கு ரூ 147.6 அல்லது 50 சதவீதம் மானிய விலையில் (எது குறைவோ அது) விவசாயிகளுக்கு விநியோகிகப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை விநியோகம் செய்யப்படும். நெல் நுண்ணூட்ட உரக் கலவை விநியோகம் செய்ய 300 ஏக்கருக்கு இலக்கீடு பெறப்பட்டுள்ளது. பயிர்களின் நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்க திரவ உயிர் உரங்கள் ஏக்கருக்கு ரூ.60 அல்லது 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை விநியோகம் செய்யப்படும்.

திரவ உயிர் உரங்கள் விநியோகம் செய்ய 250 ஏக்கருக்கு இலக்கீடு பெறப்பட்டுள்ளது. விதை விநியோக மானியத்தில் தரமான நெல் ரகங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் உள்ள ரகங்களுக்கு கிலோவிற்கு ரூ.10 மானியமாகவும் வழங்கப் படுகிறது.

18 வயது நிரம்பிய அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். சிறு-குறு விவசாயிகள் ஆதிதிராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்களின் ஆதார் அட்டை நகல் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முன்பக்க நகல் நில உடமை தொடர்பான ஆவணங்கள் ஆகியவைகளை கொண்டு உழவன் செயலி மூலம் முன் பதிவு செய்து கொள்ளலாம் அல்லது தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அல்லது உதவி தோட்டக் கலை அலுவலகளை தொடர்பு கொண்டு இத்திட்டத்தில் பயன் பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்
## முறையாக தலைக் கவசம் அணிவோம்




# விளை நிலங்களை காப்போம் விழிப்புணர்வு முகாம்



ஈரோடு, ஜூன் 25

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் விவசாயிகளுக்கு விளைநிலங்களை காப்போம் விழிப் புணர்வு முகாம் நிகழ்ச்சி (கேத்பச்சோ அபியான்) நடைபெற்றது.

இது குறித்து சத்தியமங்கலம் வட்டாரவேளாண்மை உதவி இயக்குனர் ந.சரோஜா அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, சத்தியமங்கலம் வட்டாரம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம், அரசூர் பஞ்சாயத்து விளைநிலங்களை காப்போம் விழிப்புணர்வு முகாம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

விளை நிலங்களை காப்போம் விழிப்புணர்வு முகாம் நிகழ்ச்சியில் மண் பரிசோதனை முடிவின் அடிப்படையில் சமச்சீர் முறையில் உர மேலாண்மை மேற்கொள்ள வேண்டும், பசுந்தாள் பயிர்களை நடவு செய்து மண்ணின் வளத்தை இயற்கை முறையில் மேம்படுத்த வேண்டும், இரசாயன உரங் களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உர பயன்பாட்டை மேம்படுத்த வேண்டும்.

மேலும் உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் மண் வளம் காக்கப்படும் என்பது போன்ற விழிப்புணர்வு செய்திகளை விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# விவசாயிகளுக்கு மானிய விலையில் தக்கை பூண்டு விதைகள் வினியோகம்

அரியலூர், ஜூன் 25

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் தக்கைப்பூண்டு விதைகள் வினியோகம் செய்யப் பட்டு வருகிறது. தக்கைப்பூண்டு ஒரு சிறந்த பசுந்தாள் உரப்பயிர் ஆகும். இந்த பயிரை சாகுபடி செய்து பூக்கும் முன்பு (அதாவது விதைத்த 45ஆவது நாளில்) அதே நிலத்தில் மடக்கி உழவு செய்வதன் மூலம் மண்ணில் இயற்கையான கரிமச்சத்து மற்றும் தழைச்சத்து அதிகரிக்கிறது. இதனால் உரச்செலவு குறைவதுடன் மண்ணின் வளம் மேம்பட்டு, பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூல் கணிசமாக அதிகரிக்க உதவுகிறது. மேலும் தக்கைப் பூண்டு பயிர் வளிமண்டல நைட்ரஜனை நிலைப்படுத்தி, மண்ணில் ஹெக்டருக்கு 60 கிலோ முதல் 100 கிலோ வரை தழைச்சத்தை நிறுத்தும் தன்மை உள்ளது. இதனால் ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறிப்பாக யூரியா பயன்பாட்டை கணிசமாக குறைக்கிறது. இதன் மூலம் உற்பத்தி செலவு குறைவ தோடு ஹெக்டருக்கு 15 டன்கள் முதல் 18 டன்கள் வரை மக்கும் குப்பை சத்து கிடைக்கிறது. இதனால் மண்ணில் நீர்பிடிப்புத் திறன் மற்றும் நுண்ணுயிரிகளின் செயல்பாடு அதிகரிப்பதால் நிலத்தின் நீண்ட கால வளமும் பாதுகாக்கப் படுகிறது.

எனவே தா.பழூர் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆதார் அட்டை, சிட்டா உள்ளிட்ட உரிய ஆவணங்களுடன் தா.பழூர் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி மானிய விலையில் தக்கைப்பூண்டு விதைகளை பெற்று பயன்பெறலாம் என தா.பழூர் வட்டார உதவி இயக்குநர் தமிழ்மணி கூறியுள்ளார்.



# விளை நிலங்களை பாதுகாப்போம் பயிற்சி முகாம்



கடலூர், ஜூன் 25 கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பாக 25.06.26 அன்று, குறிஞ்சிப் பாடி வட்டாரம், ஆடுர் அகரம் கிராமத்தில், விளைநிலங்களை பாதுகாப்போம் பயிற்சி முகாம் நடைப்பெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, நிலங்களின் சத்துக் களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். மேலும் முனைவர் கமலக் கண்ணன், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன் பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டசத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண் வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

மேலும் உதவி இயக்குநர், வேளாண்மை துறை, வேளாண்மைக்கான மத்திய, மாநில திட்டங்களை தெளிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர், உதவி வட்டார தொழில்நுட்ப அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரம், ஆடுர் அகரம் கிராமத்தை சேர்ந்த 65க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டுபயன் பெற்றனர்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# நவீன வேளாண்மையில் கொய்யாவின் மதிப்பூட்டிய பொருட்கள்



## பதப்படுத்துதல் (Processing)

பொதுவாக கொய்யா பழத்தை அப்படியே சாப்பிடுவது தான் வழக்கமாக உள்ளது. மேலும் பழப்பாகு பழத்திலிருந்து பெறப்படுகிறது. கொய்யா பழம் செறிவு மிகுந்த கூழ்மமாக்கி சிறிய கேன்களில் பதப்படுத்தப் படுகிறது. பக்குவப்படுத்தப்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் கொய்ய பழ ரகமானது அதனுடைய கூழ், சர்க்கரை, அமிலத்தன்மை, பெக்டின் மற்றும் டேனின் போன்ற வேதிப் பொருட்கள் மற்றும் வைட்டமின் 'சி' சத்து ஆகிய தன்மைகளைப் பொறுத்தே தேர்வு செய்யப்படுகின்றது. மேலை நாட்டு சந்தைகளில் நிறம் மிகுந்த சதையுடைய கொய்யாக் கூழ்மத்திற்கும் அதனுடைய பக்குவப்படுத்தப்பட்ட உபரி பொருட் களுக்கும் அதிக கிராக்கி உள்ளது. ஒரு சில பக்குவப்படுத்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறைகள் பற்றி கீழே காணலாம்.

## கூழ் (Pulp)

கொய்யா கூழனாது கொய்யாப் பழத்தையும் தண்ணீரையும் (20 சதவிகிதம்) நன்கு கலக்கி ஒன்றாக்கி வடிகட்டுதல் மூலம் பெறப்படும் ரசமாகும். இவ்வாறு பெறப்பட்ட கூழனாது 78-78 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் சூடுபடுத்தப்பட்டு 1000 பி.பி.எம் கந்தக டை ஆக்ஸைடு அடைக்கப்பட்ட பெரிய கொள்கலனில் சேமிக்கப்படுகிறது.

## சாறு (Juice)

கொய்யா பழச் சாறானது புதிதாக அறுவடை செய்யப்பட்ட கொய்யா பழத்திலிருந்தே பெறப்படுகிறது. சிறு துண்டுகளாக்கப்பட்ட கொய்யா பழத்தைப் பிழிந்து நன்கு வடிகட்டுவதன் மூலம் கொய்யா சாறு பெறப்படுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட பழச் சாற்றுடன் பெக்டிக் என்சைம்களை சேர்ப்பதன் மூலம் சாற்றின் தன்மை மேம்படுத்தப்படுகின்றது. இந்தச் சாறானது மேலும் மேம்படுத்தப் பட்டு செறிவு மிகுந்த பானமாகவும், மதுபானமாகவும் வேறு சில பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

கொய்யா சாறானது பேரிக்காய், ஆப்பிள் மற்றும் மாம்பழம் ஆகிய பழத்தின் சாறுடன் கலந்தும் உபயோகிக்கப்படுகின்றது. நல்ல தரமான மதுபானமானது 25 சதவிகிதம் சாறு 0.5 சதவிகிதம் அமிலத்தன்மை மற்றும் 20 சதவிகிதம் மொத்தக் கரையும் திடப் பொருள் ஆகிய மூன்றும் கலந்த கலவை ஆகும். இதைப் போலவே 15 சதவிகிதம் கூழ் 14 சதவிகிதம் மொத்தக் கரையும் திடப்பொருள் மற்றும் 0.25 சதவிகிதம் அமிலத்தன்மையுடைய பூத்தேனின் சுவையுடைய பொருளும் தயாரிக்க கொய்ய பயன்படுத்தப் படுகின்றது.

**பழப்பாகு**

புதிதாக அறுவடை செய்யப்பட்ட கொய்ய பழத்திலிருந்து பெறப் படும் பொருட்களுள் இது முக்கியமானது. பழப்பாகு உற்பத்திக்கு சிறிதளவே கனிந்த பழமானது உபயோகிக்கப்படுகின்றது. நன்கு சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட கொய்யா பழத்துண்டுகளுடன் சம அளவு நீர் சேர்த்து குறைந்த வெப்ப சூழலில் 30-45 நிமிடங் களுக்கு கொதிக்க வைக்கப்படுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட கூழனாது ஒரு தூய்மையான துணி மூலம் நன்கு வடிகட்டப்பட்டு தெளிவான சாறு பெறப்படுகின்றது. இம்முறையில் பெறப்பட்ட சாறு பழப்பாகு தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு பெறப்பட்ட சாறானது டிராப் சோதனைக்கு உட்படுத்தப் பட்டு பெக்டின் என்ற வேதிப் பொருளின் அளவு நிர்ணயிக்கப் படுகிறது. இந்த சாற்றுடன் சர்க்கரை (0.75 கி.கி ஒரு கிலோ பெக்டின் நிறைந்த பானம்) சேர்க்கப்பட்டு வாய் குறுகிய பாத்திரத்தில் இட்டு கொதிக்க வைக்கப்படுகின்றது. இவ்வாறு 15 நிமிடங்கள் கொதிக்க வைக்கப்பட்ட 6-7 கிராம் சிட்ரிக் அமிலம் சேர்க்கப்பட்டு சிறிதளவு நீரும் சேர்க்கப்படுகின்றது. நன்கு சூடாக்கப்பட்ட கூழனாது சுத்தம் செய்யப்பட்ட கண்ணாடி புட்டியில் சேமிக்கப்படுகின்றது. இந்த பழக்கூழனாது ஊதா கலந்த நிறமாகவும், நறுமணம் மிகுந்தும் நல்ல சுவையுடனும் காணப்படும்.

**பாலாடைக் கட்டி (Cheese)**

நல்ல தரமான பாலாடைக் கட்டியானது புதிதாக அறுவடை செய்யப்பட்ட பழங்களிலிருந்து பெறப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப் பட்ட கொய்யா பழத்தை சிறு துண்டுகளாக்கி கழுவி சம பங்கு நீர் சேர்த்து 45 நிமிடங்கள் கொதிக்க வைக்கப்படுகின்றது. இந்த கூழை ஒரு நல்ல துணியில் வடிகட்டுவதன் மூலம் கொட்டைகள் அகற்றப் பட்டு சுத்தமான பானம் பெறப்படுகின்றது. ஒவ்வொரு கிலோ கூழுக்கும் 1-1.25 கிலோ சர்க்கரை 1.5-3 கிராம் சிட்ரிக் அமிலம் மற்றும் 56-60 கிராம் வெண்ணெய் சேர்க்கப்படுகின்றது.

இந்தக் கலவையை ஒரு திடமான பசை வடிவம் வரும் வரை வேக வைக்க வேண்டும். சிறிதளவு உப்பு (2 கிராம் / கி.கி) பரிந்துரைக்கப் பட்ட சிவப்பு நிறமி ஆகியவை கடைசியில் சேர்க்கப்பட வேண்டும். சூடான பாலாடைக் கட்டியை ஒரு பாத்திரத்தில் பரப்பி நன்கு ஆற வைக்க வேண்டும். அதன் பின்னர் பாலாடைக் கட்டியை தேவையான அளவிற்கு வெட்டி பொட்டலம் சிப்பமிட வேண்டும்.

**டோபி**



கொய்யா டோபியானது நல்ல சுவையுடையது. இது கடைகளில் கிடைக்கும் சாக்லேட் சுவைக்கு நிகரானது. டோபி தயாரிப்பிற்கு 1.5 கிலோ சர்க்கரை 125 கிராம் வெண்ணெய் ஆகியவற்றை 1 கிலோ பழக்கூழுடன் கலந்து நன்றாக கொதிக்க வைக்க வேண்டும். அதன் பின் ஒரு தேக்கரண்டி ( 5 கிராம் ) உப்பு 2 கிராம் சிட்ரிக் அமிலம் மற்றும் உண்பதற்கு கந்த நிறமி ஆகியவற்றை டோபி கலவையுடன் சேர்க்க வேண்டும். பின்னர் அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றி ஆற வைத்து கெட்டியானவுடன் தேவையான அளவில் வெட்டி நல்ல தரமான தாளில் சுற்றி வைக்க வேண்டும்.

**அடைக்கப்பட்ட கொய்யாத்துண்டு (Canned Guava Slice)**

நன்கு கனிந்த அல்லது ஒரளவு கனிந்த பழங்களை தோல் நீக்கியோ அல்லது நீக்காமலோ பாதியாகவோ அல்லது நான்கு துண்டுகளாகவோ வெட்டி, 5 நிமிடங்களுக்கு 1-2 சதவிகிதம் பிரைன் கரைசலில் மூழ்கடித்து 40 டிகிரி பிரிக்ஸ் கரைசலில் 0.25 சதவிகித சிட்ரிக் அமிலக் கரைசலுடன் வைக்க வேண்டும்.

**உலர்த்தப்பட்ட பொருட்கள் (Dehydratarde products)**

கொய்யா துண்டுகளிலிருந்து (அரை அல்லது நான்கு) கொட்டை நீக்கியோ அல்லது நீக்காமலோ வறண்ட காற்றின் மூலமோ அல்லது சவ்வூடு நீரிறக்கம் முறை மூலமாகவோ நீரை முற்றிலுமாக நீக்க வேண்டும். கொய்யாத்துண்டுகளை கொதிக்கும் நீரில் 4 நிமிடங்களுக்கு ஊற வைத்து 20 நிமிடங்களுக்கு கந்தகம் கலந்த நீரிலிட்டு 60 டிகிரி செல்சியஸ் வெப்ப சூழலில் நீர்ப்பதமானது 6-7 சதவிகிதம் குறையும் வரை உலர்த்தப்பட செய்ய வேண்டும்.

*தகவல் : T.யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேரராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.*

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இயற்கை வேளாண்மையில் பஞ்சகாவ்யா தயாரிப்பு மற்றும் பயன்படுத்தும் முறைகள்

பஞ்சகவ்யா என்பது பசுவிடமிருந்து பெறப்படும் ஐந்து முக்கியப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு சிறந்த இயற்கை உயிரி நீர்மக் கலவை ஆகும். 'பஞ்ச' என்றால் ஐந்து, 'கவ்யா' என்றால் பசுவின் பொருட்கள் என்று பொருள். இது இந்து சமயக் கோயில்களில் அபிசேகப் பொருளாகவும், ஆயுர் வேதத்தில் மருந்துப் பொருளாகவும், இயற்கை விவசாயத்தில் தாவர வளர்ச்சி ஊக்கியாகவும் மற்றும் பூச்சி விரட்டியாகவும் பயன்படுகிறது.

## பஞ்சகவ்யா அறிமுகம்

இயற்கை வேளாண்மையில் பயிர் ஊக்குவிப்பானாகப் பயன் படுத்தப்படும் பஞ்சகவ்யாவை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர் ஈரோடு மாவட்டம், கொடுமுடியைச் சேர்ந்த மருத்துவர் கே.நடராஜன் ஆவார். அல்லோபதி மருத்துவாரான டாக்டர் நடராஜன், 1990-களின் பிற்பகுதியில் கொடுமுடி சிவன்கோயில் சிவராத்திரி பிரசாத கலவையின் உந்துதலால் இந்த வேளாண் பஞ்சகவ்யாவை உருவாக்கினார். இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார், இந்த முறையை தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளிடம் கொண்டு சேர்த்தார். சாணம், கோமியம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருட்களுடன் சேர்த்து இளநீர், வாழைப்பழம், நாட்டுச் சர்க்கரை மற்றும் தண்ணீர் ஆகியவற்றைச் சேர்த்து ஒன்பது பொருட்கள் அடங்கிய தற்போதைய வேளாண் சூத்திரத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேம்படுத்தப்பட்ட பஞ்சகாவ்ய வடிவமாக அறிமுகப்படுத்தியது. விவசாயத்திற்குப் பயன்படுவதற்கு முன்பே, பஞ்சகவ்யா என்பது இந்தியப் பாரம் பரியத்தில் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. பஞ்சகவ்யா பற்றிய குறிப்புகள் ரிக் வேதம், யஜுர் வேதம் மற்றும் அதர்வண வேதங்களிலேயே காணப்படுகின்றன. பழங்காலத்திலிருந்தே உடலைத் தூய்மைப்படுத்தவும், நச்சுக்களை நீக்கவும், நோய் களைக் குணப்படுத்தவும் ஆயுர்வேத மருத்துவத்தில் 'பஞ்ச கவ்யக்ரிதா' போன்ற மருந்துகளாக இது சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

### தேவையான மூலப்பொருட்கள்

பாரம்பரியமாக 5 பொருட்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டாலும், விவசாயப் பயன்பாட்டிற்கான வீரியத்தை அதிகரிக்க தற்போது 9 பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

1. மாட்டுச் சாணம் – 7 கிலோ
2. மாட்டு நெய் – 1 கிலோ
3. மாட்டு சிறுநீர் (கோமியம்) – 10 லிட்டர்
4. தண்ணீர் – 10 லிட்டர்
5. பசுவின் பால் – 3 லிட்டர்
6. பசுவின் தயிர் – 2 லிட்டர்
7. இளநீர் – 3 லிட்டர்
8. வெல்லம் / நாட்டுச் சர்க்கரை – 3 கிலோ
9. கனிந்த பூவன் வாழைப்பழம் – 12 எண்கள்

### தயாரிப்பு முறை (TNAU பரிந்துரை)

**முதல் நிலை (3 நாட்கள்) :** ஒரு பிளாஸ்டிக் பேரலில் 7 கிலோ



மாட்டுச் சாணம் மற்றும் 1 கிலோ மாட்டு நெய் ஆகியவற்றை நன்றாகக் கலந்து, காலை மற்றும் மாலை வேளைகளில் கிளறி 3 நாட்கள்வைக்க வேண்டும்.

**இரண்டாம் நிலை (15 நாட்கள்) :** 4-ஆம் நாளில் அதனுடன் 10 லிட்டர் கோமியம் மற்றும் 10 லிட்டர் தண்ணீர் சேர்த்து, தினமும் காலை-மாலை நன்றாகக் கலந்து 15 நாட்களுக்கு வைக்க வேண்டும்.

**மூன்றாம் நிலை (30 நாட்கள்) :** 19-ஆம் நாளில் பால், தயிர், இளநீர், வெல்லம் மற்றும் பிசைந்த வாழைப்பழம் ஆகியவற்றை இதனுடன் சேர்த்து நன்றாகக் கலக்க வேண்டும். இக்கலவையை நிழலான இடத்தில் பருத்தித் துணியால் மூடிவைத்து, தினமும் இரு முறை கிளறி வந்தால் 30 நாட்களில் பஞ்சகவ்யா தயாராகி விடும்.

**பயன்படுத்தும் முறைகள்**

● **இலை வழித் தெளிப்பு :** 1 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி (3%) பஞ்சகவ்யா என்ற அளவில் கலந்து பயிர்களின் மேல் தெளிக்கலாம்.

● **பாசன நீர் :** ஒரு ஏக்கருக்கு 50 லிட்டர் என்ற அளவில் பாசன நீருடன் கலந்து நிலத்திற்குப் பாய்ச்சலாம்.

● **விதை நேர்த்தி :** விதைப்பதற்கு முன் விதைகளை 3% பஞ்சகவ்யா கரைசலில் நனைத்து, நிழலில் உலர்த்திப்பின் விதைக்கலாம். இது முளைப்புத்திறனைஅதிகரிக்கும்.

**முக்கிய நன்மைகள்**

● தாவரங்களுக்குத் தேவையான தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை அள்ளிக் கொடுக்கும் அமுத சுரபியாக விளங்குகிறது.

● செடிகளுக்குப் பூஞ்சை மற்றும் பாக்டீரியா தொற்றுகளுக்கு எதிரான சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தியைத் தருகிறது.

● ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைக்கிறது.

தகவல் தொகுப்பு : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். Email : agri-ari@gmail.com., ph : 82480 80922.***